**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS.299/2022

பெயர் : முருகேசன் (DW1) (Cross Continuation)

த/க/பெ. :

தேதி :06.10.2025

ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

பொதுவாக சொத்தின் வழிகாட்டி மதிப்பை விட சந்தை மதிப்பு அதிகமான இருக்கும் என்றால் சரிதான். சந்தை மதிபபின் படி தான் கிரயம் வாங்க வேண்டும் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 2 ஆவணத்தில் சந்தை மதிப்பைவிட கிரய மதிப்பு குறைவாக போட்டு மோசடி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 கிரய ஆவணத்தில் 1ம் வாதியின் கைரேகை பதிவு அலுவலகத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் வாங்கினார்கள். பதிவு அலுவலகத்தில் அங்கிருந்து அலுவலர் கைரேகை வாங்கினார். பத்திரம் எழுதிய இடத்தில் மனோகர் எழுதி எடுத்து சென்று பதிவு அலுவலகத்தில் கைரேகை பெறப்பட்டது. எத்தனை கைரேகை வைத்தார்கள் என்றால் ஒவ்வொரு பக்கத்திலும் வைத்தார் எண்ணவில்லை. பொதுவாக யார் கைரேகை பெறுகிறார்கள் என்று கைரேகையின் கீழே எழுதுவார்கள் என்றால் பதிவு அலுவலகத்தில் தான் வாங்கினார்கள் அவர்கள் எழுதினார்களா என்பது தெரியவில்லை. பி.வா.சா.ஆ. 2 பக்கம் 11 ல் போட்டோவிற்கு வலது பக்கம் என் தாயார் கைரேகை வைத்துள்ளார் என்றால் பொதுவாக கையெழுத்து போடுவர்கள் தான் அங்கு கையெழுத்த போடுவார்கள் கைரேகை வைப்பவர்கள் அதற்கு முந்தைய பக்கத்தில் கைரேகை வாங்கப்படும். 11ம் பக்கத்தில் கைரேகை வைக்கப்படும் என்றாலும் அவ்வாறு இல்லையெனில் ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. சசி, முருகேசன் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள். பொதுவாக சாட்சி கையெழுத்து போடுபவர்கள் அவர்களின் அடையாள அட்டை நகலில் அவர்கள் கையெழுத்து போடவேண்டும்என்றால் சரிதான். அதே போல் நான் என்னுடைய ஆதார் நகலில் கையெழுத்து போடவில்லை. பத்திரம் எழுத ஆவணங்களை ஆவண எழுத்தரிடம் நான் தான் கொடுத்தேன். விபரம் நான் தான் கூறினேன் என்றால் சரிதான். பத்திரத்தை கொடுத்து சொன்னேன். 2 நாட்களுக்கு முன்பு பத்திரம் கொடுத்தேன். அசல் பட்டா கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். என் பத்திரத்தின் அசல் பட்டா சேர்ந்துள்ளதா என்றால் கொடுத்துள்ளேன். பி.வா.சா.ஆ. 2 ஆவணம்

என்னாலும் என் மனைவியாலும் மோசடியாக என் தாயாரை ஏமாற்றி கைரேகை வாங்கி பெறப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு 2, 3 அயிட்ட சொத்துக்களை கிரயம் பெறுவதற்கு முன்பே என் தந்தை வேலாயுதம் குத்தகை சாகுபடி செய்து வந்தார் என்றால் சரிதான். அதன் பின்னர் என் தந்தை 2, 3 அ யிட்ட சொத்துக்களை கிரயம் வாங்கினார் என்றால் என்னுடைய வருமானத்தை கொண்டும் தான் கிரயம் வாங்கப்பட்டது. தற்போது எனக்கு வயது 55. கிரயம் வாங்கிய காலத்தில் எனக்கு 19 வயது. நான் 10 வகுப்பு வரை படித்துள்ளேன். தற்போது விவசாயம் செய்து வருகிறேன். 1989 க்கு முன்பே 4 ஆண்டுகளாக நான் நெல், அரிசி வியாபாரம் செய்து வந்தேன். அப்போது என் அப்பாவுடன் நாங்கள் கூட்டுக்குடும்பமாக இருந்தோம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 1ன் ஆவண படி கிரய தொகை ரூபாய். 7092/- என்றால் சரிதான். அதில் பாதி கிரய தொகை ரூபாய். 3546/- என் தந்தை சாகுபடி செய்த வகையில் உள வடைக்கப்பட்டது என்றால் சரிதான். பாக்கி ரூபாய். 3546/- என் தந்தை கொடுத்தார் என்றால் சரிதான். வழக்கு 3 வது அயிட்ட சொத்து புல எண். 291/1 1.40 ஏக்கர் என் தந்தை குத்தகை சாகுபடி செய்து வந்தார் என்றால் சரிதான். மேற்படி கிரய ொசத்தன் கிரய தொகை 5040/- என்றால் சரிதான். அதில் சரிபாதி 2520/- என் தந்தை சாகுபடி செய்த வகையில் உள வடைக்கப்பட்டது என்றால் சரிதான். பாக்கி ரூபாய். 2520/- என் தந்தை கொடுத்தார் என்றால் சரிதான். எனவே, தாவா 2, 3 அயிட்ட ம் என் தந்தைக்கு உரிமையானது என்றால் என்னுடைய வருமானத்திலும் வாங்கப்பட்டவை. 2, 3 அயிட்டசொத்துக்களை பொறுத்து என் பெயரிலும் 4 ம் பிதிதிாவாதி பெயரிலும் உள்ள பட்டா பெயரளவிலானது என்றால் சரியல்ல. எங்கள் தந்தை எங்களுக்கு பதிவு ஆவணம் மூலம் எழுதி வைத்துள்ளார். வழக்கு 4 வது அயிட்ட சொத்து பத்திரம் இல்லை பட்டா மட்டும் தான் என்றால் சரிதான். அது என் தந்தை பெயரில் உள்ளது. தாவா சொத்துக்கள் அனைத்தும் என் தந்தையின் உரிமை மற்றும் அனுபவத்தில் இருந்து வந்தது என்றால் சரியல்ல. 4 வது அயிட்ட சொத்து என் தந்தை உயிருடன் இருக்கும் போதே விற்று விட்டார். மற்ற சொத்துக்கள் என் தந்தையின் சுவாதினத்தில் இருந்தது என்றால் என் தந்தை எனக்கும் என் தம்பிக்கும் ரிஜிஸ்டர் செய்து கொடுத்து எங்கள் மேற்பார்வையில்தான் இருந்தது. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தந்தையின் இறப்பிற்கு பின்னர் வாதிகள் மற்றும் 1 முதல் 9 பிரதிவாதிகளின் கூட்டு உரிமை மற்றும் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. 2007 ல் லேயே கிராம பஞ்சாயத்தல்

எங்களுக்கு பிரித்துக் கொடுகக்பட்டது. பஞ்சாயத்து கிராமத்தில் நடந்தது. தேதி நினைவில்லை. ஊர் முக்கியஸ்தர்கள் 10, 15 நபர்கள் இருந்தார்கள். ஆதிமூலம் , எழுதி கையெழுத்து போட்டார். இ. கோவிந்தசாமி, ஜெ. சொல்வி, டி. சங்கரமூர்த்தி, விஜயராகவன், கண்ணன், முருகேசன் ஆகியோர்கள் கையெழுத்து போட்டார்கள். என் தாயார் கையெழுத்து போட்டாரா என்றால் நினைவில்லை. அவரும் உடன் இருந்தார். 1, 2, 5 முதல் 9 பிரதிவாதிகள் கையெழுத்து போட்டார்களா என்றால் இல்லை. பாக பிவினை பத்திரத்தை பதிவு அலுவகத்தில் பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேன். 2007 ல் பஞ்சாயத்து நடந்ததாக வழக்கிற்காக பொய்யாகசொல்கிறேன் என்றால் சரியல்ல. 510/2 எ, எங்கள் குடும்ப சொத்து என்று எதிர் வழக்குரையில் சொல்லி உள்ளேன் என்றால் அதை என் தந்தை உயிருடன் இருந்த போதே விற்று விட்டார். வழக்கு சொத்தை தவிர வேறு சொத்துக்கள் என் தந்தை பெயரில் இல்லை என்றால்சரிதான். தாவா சொத்தில் 01.12.2021 ல் நாங்கள் கிரயம் வாங்கியதால் என் தாயாரை வெளியேர சொன்னோம் என்றால் சரியல்ல. அப்போது தான் நாங்கள் மோசடியாக கிரயம் வாங்கியது என் தயாருக்கு தெரியவந்தது என்றால் சரியல்ல. என் தாயார் நேரடியாக பதிவு அலுவலகம் வந்து எழுதிக் கொடுத்தார். 2020 ம் கொரோனா காலகட்டம் என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு தலா 1/8 பாகம் உள்ளது என்றால் சரியல்ல. 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு தலா 1/8 பாகமும், 5, 6 பிரதிவாதிகளுக்கு சேர்ந்து 1/8 பாகமும், 7 முதல் 9 பிரதிவாதிகளுக்கு 1/8 பாகமும் உள்ளது என்றால் சரியல்ல. தாவாவில் கோரியபடி வாதிகளுக்கு பரிகாரம் கிடைக்ககூடியது என்றால் சரியல்ல. பிராது படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. என் மனைவி சாட்சியம் அளிக்க வருவாரா என்றால் வருவார்.

**1, 2, 4 முதல் 6 பிரதிவாதிகள் வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்கள்.**